**மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டம் - 2019**

---

மேல் மாகாண வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செறய்திட்த்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள முன் தெரிவு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளின் 27 கிலோமீற்றர்களினை தரமுயர்த்துதல், முன்னேற்றுதல் மற்றும் விரிவாக்கல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,232.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 24.87 மில்லியனானதுடன் அதில் ரூபா 2,209.84 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2017 ஒக்டோபர் 05 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஜுன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. அதன் பின்னர் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2021 செப்தம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் (ERD) தகவல்களின் பிரகாரம், செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது கடன் கணக்கிலிருந்து ரூபா 643.56 மில்லியன் செலவிட்டிருந்த அதேவேளை ரூபா 440.18 மில்லியன் தொகையான செலவீடுகளே நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, கடன் கணக்கு நிதிக்கூற்றுக்களில் ரூபா 203.38 மில்லியனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 203.38 | கடன் கணக்கு ரூபா 203.38 மில்லியனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | ரூபா 203,375,878.25 தொகையான மொத்த செலவீட்டு மிகுதியின் வித்தியாசம் 2019 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு உதவி பெறவேண்டியதாக கணக்கிடப்பட்டிருந்தது. | கடன் செலவீடுகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றினை சரியாக வெளிக்காட்ட சரியாக பதியப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் மாதத்திற்கான செய்து முடிக்கப்பட்ட வேலைகளுடன் தொடர்புபட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரம் இல. 15 மற்றும் இல. 23 இன் கீழாக செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 65.46 | 65.46 | நடைமுறை வேலை கணக்கு மற்றும் ஒப்பந்ததாரரிற்கு கொடுக்க வேண்டிய கணக்கு என்பவற்றின் குறை மதிப்பீடு. | சொல்லப்பட்ட இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னரே PMU இற்கு கிடைக்கப்பெற்றது. எனவே, மேற்கூறிய IPC | செயற்திட்டத்தின் சரியான நிதிநிலைமை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியன் பெறுவனவுகள் சார்பாக ஒரு ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | | | க்கள் 2020 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டிருந்தது. | |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 10.49 மில்லியன் தொகையான செயற்திட்ட கொடுப்பனவுகள் செயற்திட்டங்களின் கிரயங்களை கவனத்தில் கொள்ளாது செயற்திட்ட கண்காணிப்பு பிரிவில் மேம்படுத்தப்பட்ட ஏனைய 6 செயற்திட்டங்களிற்கிடையில் பொதுவான செலவுகளை பகிர்ந்தளிப்பதற்கு செயற்திட்டத்தினால் பிழையான முறை பின்பற்றப்பட்டதன் காரணமாக, ரூபா 1.65 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. | 1.65 | செயற்திட்ட கிரயங்களின் அதிகரிப்பு. | கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. திருத்தம் உங்களது அறிக்கையில் குறிப்பிட்டபடி 2020 ஆம் ஆண்டின் கீழ் செய்யப்படும். | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் கீழ் மீதமாக காணப்படும் ஒவ்வொரு செயற்திட்டங்களுக்கிடையேயும் பொதுவான மேந்தலை கிரயங்களை பகிர்ந்தளிக்க சரியான முறை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஈ) | 2019 ஜுலை மாதத்திற்கான ஆலோசக பெறுவனவுகளுடன் தொடர்புபட்ட ரூபா 203,537 தொகையான பெறுமதி சேர்வரி உரிய கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் பெறுபேறாக, செயற்திட்ட செலவினம் நிதிக்கூற்றுக்களில் அப் பெறுமதியால் குறைவாக காட்டப்பட்டுள்ளது. | 0.203 | செயற்திட்டத்தின் ஆலோசகர் கிரயத்தின் குறை மதிப்பீடு. | கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் உரிய கணக்குகளில் சரியாக பதியப்பட்டது. | குறித்த ஆண்டிற்கான செலவினங்களில் சரியான தன்மையை வெளிப்படுத்த கொடுக்கல் வாங்கல்கள் உரிய பேரேட்டு கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

(அ) கடன் உடன்படிக்கையானது 2015 ஜுன் 26 இல் கையொப்பமிடப்பட்டிருப்பினும், காணி கொள்வனவு நடவடிக்கைகளின் தாமதம் காரணமாக, பொதி - I இன் புனர்நிர்மான வேலைகள் 02 வருடம் 06 மாதங்கள் தாமதமாக காணப்பட்ட அதே வேளை ஒப்பந்த பொதி - II இன் புனர்நிர்மான வேலைகள் 02 வருடம் 03 மாதங்கள் தாமதத்துடனும் காணப்பட்டது.

(ஆ) வீதி மேம்படுத்தல் ஒப்பந்த பொதி - 1 இன் கீழான கடுவல - அத்துருகிரிய வீதி திட்டமிடப்பட்ட பௌதீக செயலாற்றலிற்கு 52.93 சதவீதம் பின்னாக காணப்பட்டதுடன் வல்கம - அத்துருகிரிய வீதி திட்டமிடப்பட்ட பௌதீக செயலாற்றலிற்கு 68.37 சதவீதம் பின்னாக காணப்பட்ட அதேவேளை, ஒப்பந்த பொதி - II இன் கீழான அனைத்து வீதிகளின் வீதி மேம்படுத்தல் திட்டமிடப்பட்ட செயலாற்றலிற்கு 90 சதவீதம் பின்னாக காணப்பட்டது

## 3.2 காணி சுவீகரிப்பு மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 416 அரச காணித் துண்டுகள் உள்ளடங்களாக 2,611 காணித் துண்டுகள் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 486.86 மில்லியன் தொகையான இழப்பீடு 218 காணித்துண்டுகளிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், எவ்வித காணித் துண்டுகளும் வட்டி கொடுப்பனவிற்காக போதியளவு நிதி இல்லாததன் காரணமாக காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதன் மீதான இழப்பீடு மற்றும் வட்டி கொடுப்பனவுகள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். | காணியின் உரிமையினை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்ற துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |